பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு: சான்றாண்மை இதழ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1955

ஆசிரியர் :: இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. மார்கழி, ௨ 17—12—54 தளிர்-11

## திருவள்ளுவர் அருள் மொழிகள்

1. அ ஆ, க ங முதலான எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் 'அ' என்னும் எழுத்தே அடிப்படையாய் உள்ளது; அதுபோலத்தான், உயிர்கள் உயிரில்லாதவைகள் எல்லாம் உள்ள உலகத்துக்கும் பெரிய உயிர்போல உள்ள கடவுள் மூலமாய் இருக்கிறது.

2. மக்கள், அறிவை வளர்த்துக்கொள்ளப் படிக்கிறார்கள்; ஓரளவு அறிவு வளர்ந்தபின், உலகத்திலேயே தூய அறிவுள்ள பொருள் எது என்று தெரிந்து அதனோடு ஈடுபாடு கொள்வது அழகு! உயர்ந்ததைத் தெரிந்து ஈடுபடாவிட்டால் படித்து அறிவு அடைந்ததனால் பெரும்பயன் ஒன்றுமில்லை.

3. தூய அறிவுப் பொருள் என்பது, அறிவில்லாத மற்றப் பொருள்களில் கலந்திருப்பதைவிட, அறிவுள்ள உயிர்களின் உள்ளத்தில் அன்புணர்வாய்க் கலந்திருப்பது இயல்பு; மக்கள் அந்த அன்புப் பொருளை அவரவர் உள்ளத்தில் அன்பால் அணுகி உணர்ந்தால், உயர்ந்த நிலையில் மாறுதலின்றி வாழ முடியும்.

4. கடவுள் தூய பொருள் என்றால், விருப்பு வெறுப்பு இல்லாதவன் என்பது கருத்து. அவனோடு இணக்கங் கொள்ளவேண்டுமானால் மக்களும் விருப்பு வெறுப்பு இல்லாத தூய உள்ளத்துடன் அணுக வேண்டும். அப்படி அணுக அணுக, தூய்மை நிறைவு தானே அமையும். அந்நிலையில் அவர்களுக்குத் துன்பம் என்பதே இல்லை.

5. வினைகள் தாக்கித் துன்பம் உண்டாகுமே என்றால், தூய்மை நிலையில் வினைகளுக்குத் தாக்கும் ஆற்றல் மழுங்கிவிடும்; உண்மையோடு இறைவன் சிறப்புகளை உணர்ந்து ஈடுபடுகிறவர்களுக்குத் தெய்வ ஆற்றல் மிகுதிப்படுவதனால், இருள் சேர் இருவினைகளின் ஆற்றல் அந்நிலையிற் செல்லாது.

6. தூய நிலையில் நிற்பதற்கு ஐம் பொறிகளின் வழியாகச் செல்லும் விருப்பு வெறுப்புகளாகிய அழுக்குகளை அகற்ற வேண்டும்; குரு வடிவில் வரும் தெய்வத்தன்மையுடையோர் ஐம்பொறி அடக்கம் உடையவராய் இருப்பர்; தீமையில்லாத ஒழுக்க நெறியென்பது, இப் பொறி அடக்கந்தான்; குருவைப் பின்பற்றி ஒழுக்க நெறியில் நிற்பவர்கள், அழிவில்லாத உயர்ந்த வாழ்வில் எப்போதும் வாழ்ந்து வருவார்கள்.

7. குருவடிவில் ஈடுபடும்போது, அது, கடவுள் ஈடுபாடாகவே இருக்கவேண்டும்; எந்த நிலையிலும் தனக்கு இணையில்லாத ஒருவனாகிய முழுமுதல்வன் தொடர்பையே மேற்கொண்டிருக்கவேண்டும்; அவன்தான் கவலையில்லாதவன்; அப்போதுதான் மனக்கவலை தீரும்; ஒரு பொருள் ஈடுபாடு என்னும் கடவுள் வழிபாடு இல்லாதவர்கள் கவலை இல்லாமல் இருப்பது அரிது.

8. மக்களுக்கு மனக் கவலை என்பது உலகப் பொருள்களாலும், உலக இன்பங்களாலும் உண்டாகிறது; கவலையில்லாமல் உலகப் பொருள்களையும் உலக இன்பங்களையும் பயன் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு; அது, அற நெறியில் அவற்றைக் கையாள்வதுதான்! அறநெறியைக் கடைப்பிடிப்பதற்கு அறமே வடிவாகிய இறைவன் தொடர்பு வேண்டும்; அவன் தொடர்பு இருந்தால் அச் செயல் எளிதாகும். அறக் கடலாகிய இறைவன் வழிபாட்டினால் அறநெறியில் வல்லவராகி, மக்கள், பிற பொருட் கடலாலும் இன்பக் கடலாலும் உண்டாகுங் கவலைக் கடலை எளிதில் நீந்திவிடலாம்.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.



| கிளை | செய, மார்கழி, | தளிர் |
|---|---|---|
| 7 | 17-12-54 வெள்ளி. | 11 |



## 'கல்கி' சேவை

சென்னை மல்லீசர் திருக் கோவிலில் 5-12-54 ஞாயிறு மாலை 'பெரிய புராண' வகுப்பு நடந்துகொண்டிருந்தது. சில நூறு பேர் அமைதியுடன் திருக் குறிப்புத் தொண்டர் புராணத்தில் வரும் தொண்ட நாட்டின் சிறப்பில் ஆழ்ந்திருந்தனர். 8 மணிக்கு ஒரு சீட்டுக் கிடைத்தது, 'கல்கி'யாசிரியர் மறைவு என்று; தொண்ட நாட்டின் சிறப்பில் ஆழ்ந்திருந்த தமிழ் உள்ளத்திற்கு, அச் சிறப்பின் சேவை உருவமாகவே 'கல்கி' அப்போது தோன்றினர்.

ஆம்! அன்று காலை 5 மணிக்கு மறைந்த 'கல்கி'யின் உடல் அன்பர்கள் நல்லுரையுடன் பிற்பகலிற் பிடி சாம்பராகி இரவு 8 மணிக்குள் முற்றிலும் மறைந்தது. முடிந்தபின், 'கல்கி'யின் புகழுடல் அந்நேரத்தில் தொண்ட நாட்டுச் சிறப்புருவாகவே ஒளி விட்டுத் தோன்றியது.

சோழ நாட்டில் பிறந்து, கொங்கு நாட்டில் சில நாள் இருந்து இந்தியாவின் பற்பல இடங்களிலும் உலாவி வந்தவராலும், அவர் பல ஆண்டுகளாக நிலைத்துப் பழகிவிட்ட இடம், தொண்ட நாட்டின் சென்னை நகரமே! ஆகவே தமிழ்ப் பண்பு என்னும் தொண்ட நாட்டின் சான்றாண்மைப் பண்புகள் அவர் புகழ் உருவமாயின.

சேர நாடு பொருட் சிறப்பு என்னும் பேர்ச் சிறப்பு மிக்கது; சோழ நாடு கலைச் சிறப்பு மிக்கது; பாண்டி நாடு அருட் சிறப்பு மிக்கது; தொண்ட நாடு இத்தனைக்கும் நலம் தருவதான அறச் சிறப்பு மிக்கது. சான்றாண்மை என்பது அத்தகைய அறமே.

சான்றாண்மை, அறம், சேவை, பண்பு என்பனவெல்லாம் ஏறக்குறைய ஒன்றே.

'கல்கி'யின் சேவையில் பொருளிருந்தது; கலையிருந்தது; தெய்வம் இருந்தது; சிறப்பாக அறம் இருந்தது. ஆக, தமிழ் நாடே இருந்தது; சிறப்பாகத் தொண்ட நாடே இருந்தது!

உலகத் தொண்டு என்பது அதன்கண் வாழும் மக்கள் தொண்டுதான். ஆதலால் கல்கியின் சேவை என்னும் கொள்கை க[illegible]ல் இல்லாமல் நாட்டு மக்களைப் பற்றியதாய் இருந்தது. அறிஞர், கலைஞர், செல்வர், அடியார் முதலிய நாட்டின் பெருமக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், வறுமை அறியாமை நோய் முதலியவற்றில் நெளியும் மக்கள் முதலியவர்களைப் பற்றி அமைந்திருந்தது.

சேவை என்பது ஒரு தெய்வீக நிலை. அதற்குத் தெளிவு, விசால உள்ளம், இரக்கம், ஒரு தலைப் பக்கம் இல்லாமை, உண்மை, கொள்கைக்காக வாழ்தல், நன்மை முதலிய நலங்கள் இருக்கவேண்டும். 'கல்கி'யின் சேவையில் இவை வீற்றிருந்தன.

மேற் குறித்தபடி நாட்டு மக்களையும், சேவை நலங்களையும் அடிப்படையாகக் கொண்டு, அந்தந்தக் காலத்திற்கேற்றபடி நாட்டு வளர்ச்சிக்கான ஆக்கச் சிறப்பில் 'கல்கி'யின் சிந்தனை அலைகள் தவழ்ந்துகொண்டிருந்தன.

இத்தகைய ஒரு தனிச் சேவை நாட்டுக்கு எப்போதும் தேவை! அத் தேவையைத் தம் ஆற்றலாலும், சூழலாலும், எழுத்து பேச்சு தொடர்பு முதலியவற்றாலும் இனிது நிரப்பி வந்தார் 'கல்கி'. அந்த இடத்தை இனி நிரப்புவது அவ்வளவு எளிதில் இல்லை.

நாடு 'கல்கி'க்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது; கடமையை எவ்வாறு ஆற்றுவது? அவர் தொடங்கிய அமைப்புகளை அவர் உள்ளம்போல் வளர்த்துப் பயன் பெற வைப்பது நன்று. வாழி 'கல்கி' புகழ்!

'கல்கி'யாசிரியரவர்களின் தொடர்புடையோர் அனைவர்க்கும் நமது இரங்கல் உரியது.

# நட்பு

(சி. நாராயணசாமி)

நட்பியலில் பதினேழு அதிகாரங்களை உள்ளடக்கியிருக்கின்றார் வள்ளுவர். ஏனெனில் நண்பன், ஒருவனுக்கு இன்றியமையாத துணை. இன்றுள்ள உலகத்தில் நட்பையே போற்றுகிறது. உலகம் சுருங்கி உலக மக்கள் ஐக்கிய நாடுகள் சங்கம் **(United nations)** என்னும் ஒரு ஆளுகைக் கீழ் வந்துற்றபோது உலக நாட்டு மக்களிடையே நட்புரிமை மிக இன்றியமையாததாக ஆகிவிடுகிறது. மேலும், மக்கள் தமக்குள் இருக்கும் அவநம்பிக்கையை விடுத்து, சூது, பிறர் மனை சேறல், வஞ்சகம் முதலிய தீய பண்புகளை விலக்கி அன்பு இரக்கம் ஈகை முதலிய நற்பண்புகளைப் போற்றி வாழ்ந்து ஒருவர்க் கொருவர் நட்புரிமையுடன் வாழ்வார்களானால் 'வாழ்வே' இன்பமயமாக இருக்கும் என்பதே வள்ளுவர் கருத்து. வாழ்க்கையில் நேரும் அனுபவங்களையும் அதற்கான வழிகளையும் நட்பியலிலே மிகுதியும் கூறியிருக்கின்றார்.

அதற்குமுன் புறநானூற்றுப் பாடலொன்று இக்காலத்தை எதிர் பார்த்துப் பாடப்பட்டது போன்று இருப்பதைச் சிறிது நோக்கின் நலம்.

எலியையும் புலியையும்காட்டிப் புலவர் கருத்தை விளக்குகிறார். எலி தானாக உழைப்பது மிக மிகக் குறைவு; உழைத்துண்பதே இல்லை எனலாம்; பிறர் பொருளைக் கவர்ந்தே உயிர் வாழ்வது. ஆனால் புலியோ அவ்வாறல்ல. தனக்கு எவ்வளவு பசி வந்துற்றபோதிலும் எலியைப்போல் வஞ்ச புத்தி கொள்ளாமல் தானே முயன்று உழைத்து உண்பது. இன்று உலகில் நாம் காண்கிறோம். உழைப்புக் குறைந்தவர்கள்—உழைக்கவும் விரும்பாதவர்கள்—உழைப்பையே உதாசீனப் படுத்துகிறவர்கள் பெரும் பொருளீட்டி வாழ்கிறார்கள். அறிவால்—ஆற்றலால்—உடலால் உழைப்பவர்களை விட, எலி போன்று தன் சாகசத் திறமையால், தந்திர புத்தியால் எல்லாரைக் காட்டிலும் திரண்ட செல்வந்தர்களாக வாழ்கிறார்கள். இவ்விதமானவர்கள் நாட்டுக்கு மிகக் கேடுண்டாக்குகிறவர்கள். அதனால் அவர்களிடம் நட்புக் கொள்ளலாகாது என அப் பாடல் கூறுகின்றது.

புலி திடகாத்திரமானது; உழைக்கச் சளைக்காதது. எலியைப் போன்ற கோணல் புத்தி கொண்டதல்ல. அதன் உழைப்பைப் பொறுத்து அதன் தேவையுள்ளது. ஆனால் எலிக்கு உழைப்பில்லையாயினும் தேவை மிகுவது; அதற்காக அது வயலில் விளைந்த கதிர்களைத் தேவைக்கு மிகுதியும் சேர்த்து வைத்துக் கொள்வது வியப்பன்றோ?

உடலால் உழைப்போர் ஒரு நாள் வயிற்றுப்பாட்டுக்கே திண்டாடும்போது திறமைசாலிகளெனத் தங்களைக் கூறிக் கொண்டு பலர் உழைப்பின் பயனையும் தமக்குப் பல நாளைக்குப் போதிய அளவுக்கு மேலும் குவித்து வைத்துக் கொள்வது வருந்தத்தக்கதன்றோ?

எலிபோன்ற மக்கள் வாழும் நாட்டில் பொருளாதார சமத்துவமோ, வளமான வாழ்வோ கிடைப்பது கடினம்தான். எனவே, வஞ்சக முள்ள எலி போன்ற குணமுடையார் நட்பை விட்டு, திட சித்தத்தோடு உழைத்து வேண்டிய அளவு உண்டு மிகுதியைப் பிறருக்கு ஈயும் பண்புள்ள புலிபோன்றார் கேண்மையே நாடுதற்குரியது என அப் பாடல் அறிவிக்கிறது.

"விளைபதச் சீறிடம்
நோக்கி விளைகதிர்
வல்சி கொண்டளை
மல்க வைக்கும்
எலிமுயன் றனையர்
ஆகிஉள்ள தம்
வளன்வலி யுறுக்கும்
உளமிலாளரோ(டு)
இயைந்த கேண்மை
இல்லாகியரோ!
கடுங்கண் கேழல்
இடம்பட வீழ்ந்தென
அன்(று) அவண்
உண்ணாதாகி வழிநாள்
பெருமலை விடரகம்
புலம்பவேட் டெழுந்(து)
இருங்களிற் றொருத்தல்
நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன
மெலிவில் உள்ளத்(து)
உரனுடையாளர்
கேண்மையொ(டு)
இயைந்த வைகல்
உளவாகியரோ"

(புறம்-190)

பொருளைச் சேர்த்து வைத்து உழைப்பவனுக்கு ஊதியமில்லாமல் வாடவிட்டு, நாட்டில் வறுமையும், அறியாமையும் நிலவச் செய்யும் எலிபோன்றார்க் கேண்மை ஒருநாளும் கூடாது. இவ்வுண்மை ஈராயிரம் ஆண்டுகட்கு முன் கூறப்பட்டதாயினும் நாகரிக நிலையை மனித இனம் எட்டிப் பிடிக்கும்வரை இஃது என்றும் உணரத் தக்க உண்மையாகவே இருக்கும்.

இனி, வள்ளுவர் தம் குறளில் கூறுவனவற்றுள் ஒரு சில ஈண்டு நோக்குவோம்.

இன்றைய உலகில் நட்பென்பது வெறும் கேலிக் கூத்தாகிவிட்டது; 'நட்பு' என்ற சொல்லுக்கே இழுக்கை விளைவிக்கிறது; நகுதற் பொருட்டாகவும், முகநக நட்பாகவுமே இருக்கிறது; கிடைக்கும் பயனை அளந்து பார்த்து ஒருவனிடம் தன்னை ஒப்படைக்கும் விலை மகளிரைப் போன்று ஒருவனிடம் செல்வம் இருந்தபோது நண்பர்கள் பெருகுதலும் அஃதில்லாதபோது நண்பர்கள் விலகுதலுமாக உள்ளது மிகக் கேவலமானது.

உள்ளத்தாலும், புறத்தாலும் ஒத்த நண்பர்களென இருப்போர் தம் நண்பனுக்கு ஒரு கெடுதலேற்பட்டதென்றால் நட்பையும் உதறிவிட்டு விலகும் நாசுக்கான பண்பு நாட்டு மக்களிடையே பெருகிவிட்டது. வள்ளுவர் அவர்களைப் போர்க்களத்திலே தள்ளிவிட்டோடும் அறிவில்லாத குதிரை போன்றவர்கள் என்கிறார்.

"அமரகத்து ஆற்றறுக்கும்
கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை"

(குறள்-814)

வள்ளுவர் குறளுக்கு வயது தான் அதிகரிக்கிறதே யொழிய இளமை இன்னும் நீங்கவில்லை. தமிழ் நீதி நூல்களுக்கே இப்படித்தான். ஒரு நூல் பல நூற்றாண்டுகளாகவே இளமை மாறாமல் இருக்கும்போது மக்கள் வாழ்வேன் இளமையும் மூப்புமாக மாறி மாறித் தோன்ற வேண்டும்? எத்தனையோ தலைமுறைகளைக் கண்டிருக்கிறது தமிழ் நூல்கள். ஆனால் இன்னும் திருந்திய தலைமுறை ஒன்றும் காணவில்லை.

'தமக்குப் பயன் உள்ளபோது நண்பர்களாக வருவோர், அப் பயன் பெற்றபின் அயலாராக மாறிவிடுவது அன்று எழுதப்பட்டது. ஆனால் அது இன்றைய உலகுக்குத்தான் மிகப் பொருத்தமாக இருக்கிறது.

இனி, நட்பியலில் நட்பு என்ற முதல் அதிகாரத்திலுள்ள பத்துப் பாக்களும் நட்புச் செய்ய வேண்டியதன் அவசியம், அதன் பயன், அது எத்தகையதாக இருக்கவேண்டும். நண்பர்கள் ஒருவருக் கொருவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும், என்றெல்லாம் கோவையாகக் கூறுகிறது.

ஒருவனுக்கு நட்பைப் போல் சிறந்த துணை இல்லை. எனவே நட்புச் செய்து கொள்ள வேண்டும் என்பது முதற் குறள். அப்படிச் செய்யும் போது அறிவுள்ளவர்களுடன் செய்து கொண்டால் அந்த நட்பு, வளர் பிறைபோல் நாளும் வளரும்; அறிவில்லாதவருடன் செய்யும் நட்பு முதலில் இனிமையாகி, பிறகு தேய் பிறைபோல் தேய்ந் தொழியும் என்கிறது இரண்டாவது குறள்; மூன்றாவது குறள் அவ்வாறு அறிவுள்ளவர்களுடன் நட்புக் கொண்டு பழகினால் படிக்கப்படிக்க இன்பம் பயக்கும் நூற் பொருள்போல் பழகப் பழக இன்பம் பயக்கும் என்கிறது.

அவ்வாறு இன்பம் பயக்கும் நட்புச் சிரித்து ஆடி மகிழ்வதற்காக மட்டுமன்று; தன் நண்பன் தவறிய போது இடித்துக் கூறியும் திருத்தவல்லதாக அமைய வேண்டும் என்கிறது நான்காவது குறள்.

தொடர்பும் பழக்கமுமே நட்பாகாது; அது விரைவில் அழியும்; நண்பர் இருவரும் ஒத்த உணர்ச்சி யுடையவர்களாகவும் இருக்கவேண்டும்; அவ்வகை நட்பிலே முகமலர்ச்சியும் அகமலர்ச்சியும் ஒருங்கே காண்பதாகும் என்கிறது ஐந்தாவது ஆறாவது குறள்.

தம் நண்பர் தீயவழியில் செல்லாது நல்வழியில் நடக்கச் செய்வதோடு மட்டுமன்றி, துயர் நேர்ந்த காலத்தில் உடனிருந்தும்; உடுக்கை இழந்தவுடன் கை உதவுவதுபோல் நண்பனின் துயரை விரைந்து அகற்றியும் உதவ வேண்டும் என்கிறது நட்பின் இலக்கணம் கூற வந்த ஏழாவது எட்டாவது குறள்.

அவ்வாறு தக்க இடத்தில் இடித்துக் கூறித் துன்பத்தில் பங்கு கொள்வதிலும் வெறுப்பு நிகழ்தல் இயல்பன்றோ? ஆனால், அத்தகைய வெறுப்பு நிலையும், உள்ளம் கவர்ந்த நண்பரிடையே

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்
பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை. 1

கூடாது; எப்பொழுதுமே மாறுபாடு இல்லாமல், முடியும் போது உதவி செய்து, உறவு பாராட்டுதல் என்பது மட்டுமின்றி முடிவுவரை நண்பாக வாழ்தலே சிறந்தது என நட்பை வாழ்நாள் இறுதிவரை வளர்க்கின்றன, ஒன்பதாவது பத்தாவது குறள்.

ஒருவனுக்கு வாழ்வில் இரு துணைகள் உள்ளன ஒன்று மனைவி, இரண்டாவது நண்பன் இவையிரண்டையும் தகுதியாக ஒருவன் அமைத்துக்கொண்டால் தம் வாழ்நாள் நெடுகிலும் மகிழ்ச்சி பொங்கவே வாழலாம் வாழ்வில் இன்பங் காண விழைவோர் அனைவரும் தமக்கேற்ற துணைவியையும், தக்க நண்பனையும் பெறவே பாடுபட வேண்டும். எத்தகையவர்க்கும் துணை தகுதியற்றதாயின் வாழ்வில் வெறுப்புக் கொள்ளத்தான் செய்யும். பின் அந்த வெறுப்பு ஆறுதல் பெற நண்பனே துணை செய்வான். எத்தகைய பெரிய நிலையிலுள்ளவர்களும் இவ்விரு துணைகளையும் ஏற்றபடி அமைத்துக் கொள்வாராயின் அவர்கள் வாழ்வில் கவலையே இல்லை. இவ்வழி உலக மக்களனைவர்க்குமே ஏற்றது. உலகம் இதைச் செய்யுமாயின் விரைவில் நாகரிக உலகை ஏற்படுத்தலாம்.

Telegrams: "RAMBROS"

**N.Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# மழை வணக்கம்

பெரும்பான்மை இந்தக் காலம் பேச்சுக் காலம்! பேச்சே எழுத்தாகவும் வருகின்ற காலம்! மொழி நடையிலும் பேச்சின் போக்கு ஊறிப் படிந்து படர்ந்து வருகின்றது. மேடைகளும் இதழ்களும் கதைகளும் இந்தக் காலத்தின் கலைநிலையங்கள்!

குருவி, வரம்பற்ற விரிந்த வானத்திற் பறக்கின்றது. மான், ஓரளவு பரந்த கானகத்தில் ஓடுகின்றது. மனிதன், வரம்புற்ற சிறிய தெருவழியே நடக்கின்றான். வரவர அறிவு உயர்வதன் அடையாளம் இது! மனிதன் வானத்திற் பறந்தாலும், கடலினுள் ஓடினாலும், கட்டுற்ற வரம்புகள் அவனை ஆட்கொள்ளுகின்றன. செயற்கைச் சிக்கல் அறிவின் சிறப்புப்போலும்!

செடி கொடிகளுக்குப் பேசத் தெரியாது. முழுமோனம்; செய்கையால் தனது கடமையைச் சந்தடியின்றிச் செய்கின்றது. சிற்றுயிர்களுக்குப் பேசத் தெரியாது. ஆனால், அத்தனை மோனமில்லை. அவற்றிற்கு ஒலிக்கவும் கூவவும் விளிக்கவும் தெரியும். எண்ணங்களை அவை இயல்பாக வெளிப்படுத்தி இன்புறுகின்றன. அவை கலை நிலையம். உள்ளத்தால் பணி செய்கின்றன. அவற்றின் பணியில், மலரவேண்டுமளவும் உள்ளம் மலர்ந்திருக்கின்றது. கன்றீன்ற புனிற்றாவின் குரலில் அதன் உள்ளம் எவ்வளவு கனிந்து ஒழுகுகின்றது.

வாக்கு சுருக்கம் உடையது; பேச்சு பெருக்கம் மிக்கது. இது விரிவுரைக் காலம்; அன்று, அதுவும் சென்ற நூற்றாண்டோடு சென்றுவிட்டது; இந்நூற்றாண்டு சொற்பொழிவுக் காலமாக உள்ளது; சொற்போர்க் காலமென்றும் சொல்லலாம். அப்படி பேச்சு பெருகிக்கொண்டே போகின்றது. வாயுள்ள மனிதன்!

வாக்கு மோனத்தின் முகிழ்ப்பு. காரிருட் பிழம்பைப் பிளந்தொளிரும் இடியும் மழையுமாகிய காரிய மின்னல்! பேச்சு, பனையோலைச் சலசலப்பு! இச்சலசலப்பெங்கே, காரியவுருவாகிய அவ் வானொளி மின்னல் எங்கே! ஆற்றலில் எவ்வளவு வேறுபாடு! ஆசிரியர் திருவள்ளுவர் முதலிய சான்றோர் வாக்குகளின் பேராற்றலுக்கும் பெருமைக்கும் ஓர் எல்லையுண்டோ!

திருவள்ளுவர் திருக்குறள், வான் வாக்கு! ஒரு காலத்தில் சுருங்கிய குறளாக ஒலித்தெழுந்து மின்னியது. அதன் பொருள் மழை, நாளும் பொழிந்து உலகு முழுவதையும் வளஞ் செய்து வருகின்றது. பெரியோர் வாக்குகளின் பயன் இது!

திருக்குறட் பொருளை, மழை என்பது ஈண்டு முகமனன்று. உண்மையில், திருவள்ளுவர் நூலின் உள்ளுறை முற்றும் வான்சிறப்பேயாம். உலகத்தின் வாழ்வெல்லாம் மழையில் உள்ளது; மழையின் பொழிவெல்லாம் சான்றோர் பெருமையிலுள்ளது. ஆதலால் மழைக்குக் காரணமான சான்றோர் அறநெறிகளைத் திருவள்ளுவர் தமது நூலில் உரைத்து, மழை வணக்கஞ் செய்திருக்கின்றனர்.

மழை என்பது, இயற்கையின் ஆற்றல் வெளிப்பாடு; அல்லது

இறைவன் கருணை வெள்ளம் என்றுங் கூறலாம். மழை உலகத்தை ஆக்கியும் அளித்தும் ஆளவல்லது. இயற்கையின் அடிப்படை ஆற்றலே அது. கார்காலம், உலகத்தில், ஆற்றலொழுகும் பருவம். இயற்கையின் உதவியொழுகலாறு; அம்மை வடிவு; கடலைச் சுருக்கி எழுந்து கார்வானமாகி, மின்னிப் பொலிந்து இடித்துச் சிலம்பி, அருளொழுக்கமாகப் பொழியும் அம்மையின் விளையாடலே இது. கடலில் எழுந்து மலையிற் பொழிந்து கீழ் நிலங்களில் ஆறாகி மீண்டுங் கடலையடைதலாகிய ஒரு குரவை விளையாடல் இது. வான்சிறப்பாகிய இம் மழை விளையாடலால் உலகம் எல்லா வளங்களும் நிலைகளும் மலர்ந்து உயர்ந்து வருகின்றது.

திருவள்ளுவர் வாக்கு இவ்வுண்மையையே வலியுறுத்துகின்றது. நீத்தார் தமது பெருமையால், அறன் வலியுறுத்துதலெல்லாம், இறைவன் வெளிப் பாட்டு வல்லமையாகிய வான்சிறப்பென்னுந் திருவருட் பொழிவில் திளைப்பித்தலே. அடிப்படையாகிய இத் திளைப்பு யார்யார்க்கும் ஏனை அனைத்தும் ஒருங்கு நல்கும். ஆதலின், வான் சிறப்பே திருவள்ளுவர் வாக்காயிற்றென்பது தெளியப்படும்.

பயன்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நான்கு நிலைகளைப் புலப்படுத்துகின்றன. பொருள்களானாலும் கருத்துக்களானாலும் நூல்களானாலும் கருவிகளானாலும் வேறு எவையானாலும் எல்லாம் இம்முறைமையில் இயக்கமுறுகின்றன. இயல்பான நிலை ஒன்று; அதன் ஆற்றல் வெளிப்பாடு ஒன்று; அவ் வெளிப்பாட்டால் விளங்கும் பெருமை மற்றொன்று; அது கண்டு அறிந்தொழுகுதற்குரிய உண்மை இன்னொன்று.

மண் என்பது இயல்பான நிலை; குடம் அதன் வெளிப்பாட்டு நிலை; குயவனது வன்மை அவ் வெளிப்பாட்டால் விளங்கும் பெருமை. அவன் கலைத்திறம் அதனால் அறிந்து கொள்ளுதற்குரிய உண்மை. இவற்றிற் பயன் எது வென்றால், குடத்தின் வெளிப்பாடென்பது அனைவரும் நன்கறிந்ததேயாம்.

திருக்குறட் பாயிரத்தின் நான்கு அதிகாரங்களும் இம் முறைமையில் அமைந்துள்ளன. இயல்பான நிலையில் உள்ளது கடவுள். அதன் ஆற்றல் வெளிப்பாடு மழை; அதனை வெளிப்படுத்தும் பெருமை நீத்தாருடையது. அதனால் அறியப்படுகின்ற அவரது நெறிமுறையுண்மை அறன். இவை 'கடவுள் வாழ்த்து' 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை' 'அறன் வலியுறுத்தல்' என்னும் பாயிரத் தலைப்புகள் நான்கின் சொற்சிறப்புகளாலும் இனிது விளங்குன்றன. 'வாழ்த்து' என்பதற்கு இயல்புரைத்தல் என்பது பொருள். 'சிறப்பு' என்பது உள்ளது சிறத்தலாகிய வெளிப்பாடு. அதனை விளைவித்தலாகிய பெருமையே ஐந்தவித்தபெருமை; ''ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார்கோமான் இந்திரனே சாலுங் கரி'' என்றது இவ் வுண்மையைத் தெளிவு படுத்தும். இந்திரன் என்பான் மழைக் கடவுள்; ஐந்தவித்தான் ஆற்றலுக்கு உலகத்தில் மழை[illegible] சான்று என்பது இதன் பொருள். ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'' மழையை வெளிப்படுத்தும் பெருமை இங்ஙனம் நீத்தாருடையதாயிற்று. அதனை வெளிப்படுத்திய வன்மை அந் நீத்தாரது நெறிமுறையாகிய அறவொழுக்கங்கட்கு உரியது. அறன்வலி, மக்கள் அறிந்தொழுகுதற்குரிய உண்மையாயிற்று.

அறவொழுக்கங்களால் இயல்பாகப் பெறுகின்ற சான்றாண்மையானது இங்ஙனம் கடவுளின் இயல்பினின்று அருண்முக வெளிப்பாடாகிய வான்சிறப்பை இயல்பாக உளதாக்கி உலகை உய்வித்து வருகின்றது. சான்றோர் பெய் என்று சொல்லி மழையைப் பெய்விக்கவேண்டிய கட்டாயமில்லை; அது செயற்கை முயற்சியாகும். மேலும், பெய் எனப் பெய்விப்பது கற்புடைய நன்மாதரார் செயல்; கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை. சான்றோர் நெறிமுறைமை இயல்பானது; அறத்தோடு ஒழுகும் அவர்தம் ஒழுகலாறுகள் செவ்வையாக நடக்கும் பொருட்டு இறைவன், இயல்பாகவே, அருள் மிகுந்து மழை பொழிவிக்கின்றனன். அது, புல் முதலிய ஏனைய உயிர்கட்கும் பயனாகின்றது.

இங்ஙனம் சான்றோரால் உண்டாகும் இயல்பான ஆக்கம் வானசிறப்பு! இது, திருக்குறள் வாக்கு! ஆழ்ந்த அடிப்படையுடையது! இயற்கை வணக்கமுடையது! முனிவரர் வாழ, நாடு வாழும் இயல் நெறி தெரிவிப்பது!

—முனிவர் முத்துவிழா மலர்.

# அப்பர் அருளிய அறவுரை

[பூ ஆலாலசுந்தரஞ் செட்டியார் M. A.
கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.]

'அரிது அரிது மானுடராதல் அரிது' என ஔவையாராகிய அருந்தமிழ் மூதாட்டியார் கூறிய வண்ணம் மக்கட் பிறவி கிடைத்தற்கரிய பிறவி என்பது பெறப்படுகின்றது. ஆனால் மக்களுள் பலர் தாங்கள் பிறந்ததின் பலனைப் பெறுவதில்லை. பிறந்ததின் பயன் எது என்பதைக் குறித்து நமது சாத்திர நூல்களும் தோத்திர நூல்களும் நன்கு எடுத்து விளக்கியுள்ளன. மக்கட் பிறவியினைப் பெற்றான் ஒருவன், யான் என்னும் அகப்பற்றினையும் எனது என்னும் புறப்பற்றினையும் விடுத்து மெய்யுணர்ந்து, பற்றற்ற பரம்பொருளினை நினைந்து, வழுத்தி, வணங்கி வீடுபேறு எய்த விழைதல் வேண்டும். இதற்கு நேர் மாறாக மக்களுள் பலர் நன்றாக உண்டு, உடுத்து, உறங்கி, இருவகைப் பற்றினையும் ஏற்று, இவ்வுலக வாழ்வையே மெய்யென்று கொண்டு மகிழ்ந்து தம் வாழ்நாட்களைக் கொன்னே கழிக்கின்றனர். பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனடி சேர்ந்த ஞானிகள் தாம் பாடியருளிய பாக்களுள் உலகிலுள்ள மக்கள் உய்யும் வண்ணம் ஒரு சில அறவுரைகள் வழங்கியுள்ளனர். அத்தகைய பெருமக்களுள் நமது அப்பரும் ஒருவராவர்.

இவ்வுலக வாழ்க்கையே நிலைபெற்றது எனக்கொண்டு உற்றார் உறவினருடன் மகிழ்ந்து இறைவனை மறந்து வாழும் மக்கள் அப்பர் பெருமான் கூறும் அறவுரையினைக் காண்க. அவர் நமது நெஞ்சினை நோக்கிக் கூறும் அறவுரைகள் பிறரும் அவைகளை ஏற்றுக் கொள்ளும்படி உள்ளன.

"தந்தையார் தாயா
ருடன்பிறந்தார்
தாரமார் புத்திரரார்
தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே
போமா றேதோ
மாயமா மிதற்கேதும்
மகிழவேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று
சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும்
திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம்
நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பி
லிருக்கலாமே"

(பொது: திருத்தாண்டகம்)

ஆளுடைய பிள்ளையாரும் இதே கருத்தினை வலியுறுத்துகின்றனர்.

தந்தைதாய் தன்னுடன் தோன்றினார்
புத்திரர் தாரமென்னும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக்
கில்லெனப் பற்றினாயே
வெந்தநீ றுடியா ராதியார்
சோதியார் வேத கீதர்
எந்தையா ரூர்தொழு துய்யலா
மையல்கொண் டஞ்சல் நெஞ்சே.

சிலர் 'நாம் ஏன் கடவுளை வணங்கவேண்டும்? நாம் வணங்க அவர் பார்த்துக்கொண் டிருக்கின்றாரோ?' என்றெல்லாம் கேட்பதுண்டு. இத்தகைய வினாக்களுக்கும் அப்பர்விடை இறுக்கின்றார். இறைவன் தன்னை வணங்கும் அடியவர் அன்பினையும் அளக்கின்றார் என்ற கருத்தினைக் கீழ்க் காணும் வரிகள் விளக்குகின்றன.

"விளக்கும் வேறு
படப்பிறர் உள்ளத்தில்
அளக்குந் தன்னடி
யார்மனத் தன்பினை"

(திருக்குறுந்தொகை)

"வேட்கையாற் பரவுந்
தொண்டர், அடிமையை
அளப்பர்போலும் ஆவடு
துறைய னாரே"

(திருநேரிசை)

இதுவன்றி எவரெவர் தன்னை வணங்கி வாழ்த்துகின்றார்கள் என்பதையும் எவரெவர் வீணாகப் பொழுதைக் கழிக்கின்றார்கள் என்பதையும் இறைவன் கணக்கெடுக்கின்றான் என்பதை அப்பர் நமக்கு எடுத்து விளக்கியுள்ளனர்.

"தொழுது தூமலர்
தூவித் துதித்துநின்
றழுது காமுற்
றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப்
புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்
கின்னம்பர் ஈசனே"

(திருக்குறுந்தொகை)

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையம்' என்பதனை மேற்கொண்டு அப்பர் பெருமான் நாம் உய்யும் வண்ணம் நமக்கு நமச்சிவாய மந்திரத்தின் சிறப்பினை எடுத்தோதி நம்மை இறைவன்பால் நல்லாற்றுப்படுத்துகின்றனர். 'அறிவற்ற ஏழைகாள்! யான் சொல்லுகிறேன் அமைதியாக இருந்து கேளுங்கள். நீங்கள் நமச்சிவாய மந்திரத்தை ஓதுவிராகில் அதனால் பெறுதற்கரிய தவத்தினைப் பெறுவீர்கள். மேலும் நும்மிடத்திலுள்ள நோயும் பிணியும் போதற்கு இறைவர் மருந்தாகி வந்து நும்மிடத்தே பொருந்துவர்' என அப்பர் கூறுவ[illegible]யிற் காணும் கவியிற் காண்க.

சென்னை-600 005

"இருந்து செல்லுவன்
கேண்மின்கள் ஏழைகாள்
அருந்தவந்தரும்
அஞ்செழுத்தோதினல்
பொருந்து நோய்பிணி
போகத் துறப்பதோர்
மருந்து மாகுவார்
மன்னுமாற் பேறரே"

(திருக்குறுந்தொகை;

நாம் இறைவர் திருவடியினை வழுத்துவோமாயின் இறக்கும் தருவாயில் அவர் நமக்கு உறு துணையாக விளங்குவர். "யானே தும் பிறப்பஞ்சேன் இறப்பத னுக் கென்கடவேன்" என்ற திருவாசகத்தின்படி இறக்கும் பொழுது அடையும் துன்பம் பலவாகும். புலனைந்தும் பொறி கலங்கி, நெறிமயங்கி அறிவழிந்த போது இறைவர் கூற்றினை நீக்கி, நம் குறை களைந்து திருவருள் பாலித்து, நம்மை ஆட்கொண்டு நம்மிடத்தே மாற்றறியாத செழும் பசும்பொன்னாக விளங் குவார் என்பதை அப்பர் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

"சாற்றிச் சொல்லுவன்
கேண்மின் தரணியீர்
ஏற்றின் மேல்வரு
வான்கழ லேத்தினல்
கூற்றை நீக்கிக்
குறைவறுத் தாள்வதோர்
மாற்றி லாச்செம்பொ
னவர் மாற் பேறரே"

(திருக்குறுந்தொகை)

இத்துணைப் பெருங் கருணைக் கடலாக விளங்கும் இறைவனைக் காணும் வழியினை அப்பர் நமக் குக் காட்டியுள்ளனர். உடம் பாகிய கோயிலுள் மனமாகிய விளக்கில் மெய்யுணர்வாகிய நெய்யை ஊற்றி உயிர் என்ற திரியினை இட்டால் அதுபோழ்து தோன்றும் ஞானத்தீயால் இறை வனைக் காணலாம். இதுவே இறைவனைக் காணும் வழி.

"உடம்பெனும் மனையகத் துள்
உள்ளமே தகளியாக
மடம்படு உணர்நெய் யட்டி
உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை
கழலடி காணலாமே"

(திருநேரிசை)

ஞானத்தீயால்இறைவனைக்காண லாகும் என்பது ஈண்டு நோக்கத் தக்கது. இதே கருத்தினை,

"உள்ளத்தே திரியொன் றேத்தி
உணருமா றுணரவல்லார்"

(திருக்கடவூர்- திருநேரிசை)

"ஞானத்தால் தொழுவார்கள்
தொழக் கண்டு
ஞானத்தால் உனைநானுந்
தொழுவனே"

(பொது: தனித் திருக்குறுந்தொகை)

என நாவுக்கரசர் பிறிதோரிடத் தும் கூறுவதைக் காண்க.

"சிறப்புடைய புராணங்க
ளுணர்த்தும் வேத சிரப்பொருளை
மிகத் தெளிந்துஞ்
சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை
கிரியாயோகஞ் செலுத்தியபின்
ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என்பது சிவஞானசித்தியார் (சிவஞான சித்தியார் 8, சூ. 11) வீடுபேறு அடைதற்குரிய சாதனங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காம் "பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற் படிவழி சென்று சென் றேறி" (கருவூர்த் தேவர்-திரு விசைப்பா) என்பதற்கு ஏற்ப நாம் அப்பர் காட்டியுள்ள அற வுரையின்படி ஒழுகி, மேலே காட்டிய சாதனங்கள் நான்கின் வழியே முறையே நின்று, இறை வன் திருவடியைச் சேர இறை வன் திருவருள் கூட்டுவதாக!

—முனிவர் முத்துவிழா மலர்

# கல்வி-ஒரு கூட்டு முயற்சி

## இடைநிலைக் கல்வி, மாணவனை மனிதனாக்க வேண்டும்.

### கல்வி இலாகாவினர் கருத்து

"கல்வி என்பது, பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி இலாகாவினர் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும்.

"பதினொன்கு வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி போதிக்க வேண்டுமென நமது அரசியல் சட்டம் கூறுகிறது.

"அப்படி எல்லோருக்கும் கல்வி அளிப்பதற்கான வழி வகைகளை நாங்கள் தீவிரமாக யோசித்து வருகிறோம்.

"அரசியல் சட்டம் அமு லுக்கு வந்து மூன்று ஆண்டு களாகி விட்டன; என்றாலும், 55 சதவிகிதக் குழந்தைகள்தான் பள்ளி செல்கின்றனர்

"குழந்தைகள்தான் நாட்டின் நம்பிக்கை; அவர்களை நல்ல குடி மக்களாக உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண் டிருப்பவர்கள் ஆசிரியர்களா கும்."

—கல்வி இலாகா தலைமை அதிகாரி
என். டி. சுந்தர வடிவேலு.

"இடைநிலைக் கல்வி பூரணத் துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்; இடைநிலைக் கல்வி, ஒரு மாணவன் அவன் குடிமக னாகும்போது, தானாகவே சம் பாதித்து, அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடியவனாக ஆக் கும் வகையில் இருக்க வேண் டும்,"

—எஸ். நடராஜன்.

(வடஆற்காடு ஆசிரியர்கள் சங் கத்தின் 23-வது மாநாட்டில்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்)